# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 175 · திங்கள் Monday · 21.09.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode


## ஆசிய விளையாட்டு:

# பதக்க வேட்டையை தொடங்கிய இந்தியா; 10 மீட்டர் ஏர் ரைபிளில் வெள்ளி வென்று அசத்தல்



நகோயா: நடப்பு ஆசிய விளையாட்டு போட்டியில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் தனிநபர் பிரிவில் இந்தியாவின் இளவேனில் வாளறிவன் வெளிப்பதக்கம் வென்றார். முன்னதாக, இதே மகளிர் 10 மீட்டர் ஏர் ரைபிள் குழு பிரிவிலும் இந்திய வீ ரா ங் க னை க ள் வெள்ளி வென்றது குறிப்பிடத்தக்கது.

20-வது ஆசிய விளையாட்டுப் போட்டி ஜப்பானின் ஐச்சி-நகோயா மாகாணத்தில் உள்ள மைசுஹோபார்க்தடகள மைதானத்தில் நேற்று கோலாகல மாக தொடங்கியது.

வரும் அக்டோபர் 4 வரை நடை பெற உள்ள இந்தத் தொடரில் 45 நாடுகளைச் சேர்ந்த சுமார் 11,000 விளையாட்டு வீரர்களும், ஆசிய ஒலிம்பிக் கவுன் சிலின் அகதிகள் அணியினரும் கலந்து கொண்டுள்ளனர்.

ஆறு மணி அளவில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் தனிநபர் தகுதி சுற்று மற்றும் அணிகள் பிரிவில் இறுதி சுற்றும் நடைபெற்றது. இதில் இந்தியாவின் இளவேனில் வாளறிவன், சோனம் மஸ்கர், விதர்சா வினோத் ஆகியோர் வெள்ளி வென்றனர். இது நடப்பு ஆசிய தொடரில் இந்தியா வெல்லும் முதல் பதக்கமாக அமைந்தது.

தனிநபர் பிரிவில் இளவேனில் வாளறிவன் வெள்ளி: 27 வயதான இளவேனில் வாளறிவன், மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் தனிநபர் பிரிவில் வெள்ளி வென்றுள்ளார். 252.4 புள்ளிகளை பெற்று அவர் இரண்டாம் இடம் பிடித்தார். ஜப்பான் வீராங்கனை ஹினாதா டைச்சி 253 புள்ளிகளை பெற்று தங்கம் வென்றார்.

இதனிடையே, மகளிருக்கான 'டிரடிஷனல் 60 கிலோ எம்.எம்.ஏ.' பிரிவிலும் இந்தியாவுக்கு ஒருபதக்கம் உறுதியாகியுள்ளது.

இந்தியாவின் சுச்சிகா தரியால் அரையிறுதிக்கு முன்னேறியதன் மூலம் பதக்கத்தை உறுதி செய்துள்ளார். காலிறுதிப் போட்டியில் அவர் மங்கோலியாவின் அல்டன்சிமேக் பைகல்மாவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் முதன்முறையாகஅறிமுகமானடெக்பால் (Teqball) விளையாட்டில், இந்தியாவிற்கு கிடைத்த மூன்று பதக்க வாய்ப்புகளும் முடிவுக்கு வந்துள்ளன.

வெண்கலப் பதக்கத்திற்கான கலப்பு இரட்டையர் பிரிவுப் போட்டியில் இந்திய ஜோடி 0-2 என்ற செட் கணக்கில் வியட்நாமிடம் தோல்வியடைந்தது.

இப்போட்டியில்வியட்நாம் 12-9, 12-6 என்ற கணக்கில் வெற்றி பெற்று பதக்கத்தைக் கைப்பற்றியது.

முன்னதாக, மகளிர்க்கான ஒற்றையர் பிரிவு வெண்கலப் பதக்க போட்டியில் இந்தியாவின் குயின்சி,ஜப்பானின் யுய்னா சகாமோட்டோவிடம் 0-2 என்ற கணக்கில் போராடித் தோல்வியடைந்தார். மிகுந்த விறுவிறுப்புடன் நடைபெற்ற இப்போட்டியில் 12-11, 12-11 என்ற மிகக் குறுகிய புள்ளிகள் வித்தியாசத்தில் சகாமோட்டோ வெற்றி பெற்றார். இதன் மூலம் குயின்சியின் பதக்க வாய்ப்பு கைநழுவியது.

நீச்சல்

நீச்சல் போட்டியில், ஆடவருக்கான 100 மீட்டர் பிரஸ்ட்ஸ்ட்ரோக் (100m breaststroke) ஹீட்ஸ் சுற்றில் இந்தியாவின் ரிஷப் தாஸ் 54.85 வினாடிகளில் இலக்கை எட்டி ஒட்டுமொத்தமாக 5-வது இடத்தைப் பிடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

# மானிய விலை எல்பிஜி சிலிண்டர் பெற அக்டோபர் 1க்குள் பயோமெட்ரிக் ஆதார் சரிபார்ப்பு கட்டாயம்



புதுடெல்லி: மானிய விலையில் எல்பிஜி சிலிண்டர் பெறுபவர்கள் அதை தொடர்ந்து பெறுவதற்கு அக்டோபர் 1ம் தேதிக்குள் பயோமெட்ரிக் ஆதார் சரிபார்ப்பை முடித்திருக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வீட்டு உபயோகஎல்பிஜி நுகர்வோர், மானியத்துடன் சில்லறை விற்பனை விலையில் எல்பிஜி சிலிண்டரைப் பெறுவதற்கு அக்டோபர் 1, 2026 முதல் பயோமெட்ரிக் ஆதார் சரிபார்ப்பு (BAA) கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மானிய விலையில் வழங்கப்படும் எல்பிஜி வீட்டு உபயோக சிலிண்டர், உண்மையான மற்றும் தகுதியான குடும்பங்களைச் சென்றடைவதை உறுதி செய்வதையும், வணிக மற்றும் தொழில்துறை பயன்பாட்டிற்குத் திசைதிருப்பப்படுவதைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 19 நிலவரப்படி, வீட்டு உபயோக எல்பிஜி நுகர்வோரில் 27.43 கோடி பேர், அதாவது மொத்தத்தில் 89.9 சதவீதம் பேர்,ஏற்கனவே பயோமெட்ரிக் ஆதார் சரிபார்ப்பை முடித்துள்ளனர். இந்த நுகர்வோர் எதையும் செய்யத் தேவையில்லை. அவர்கள் எல்பிஜி சிலிண்டர் பெறுவதற்கான முன்பதிவுகள் முன்பைப் போலவே தொடரும்.

இந்தச் சரிபார்ப்பு செயல்முறை முடிந்தவுடன், இதுவரை அதை முடிக்காத நுகர்வோரும் மானிய விலையில் நிரப்புவதற்கு முன்பதிவு செய்ய முடியும். LPG விநியோகத்தின் போது, விநியோக ஸ்தரின் ஷோரூமில் அல்லது அந்தந்த எண்ணெய் சந்தைப்படுத்துதல் நிறுவனங்களின் மொபைல் செயலிகள் மூலம் BAA-வை பூர்த்தி செய்யலாம்.

இண்டேன் வாடிக்கையாளர்கள் இந்தியன்ஆயில் ஒன் (IndianOil ONE) செயலியையும், பாரத் கேஸ் நுகர்வோர் ஹலோபிபிசிஎல் (HeIloBPCL) செயலியையும், ஹெச்பி கேஸ் (HP Gas) வாடிக்கையாளர்கள் ஹெச்பி பே (HP PAY) செயலியையும் பயன்படுத்தலாம். நுகர்வோர் இந்த செயலிகள் மூலம் வீட்டிலிருந்தே இந்த செயல்முறையைத்தாங்களாகவே பூர்த்தி செய்ய முடியும்.

BAA-வை பூர்த்தி செய்ய விரும்பாத அல்லது இயலாத நுகர்வோர் தொடர்ந்து LPG-யைப் பெறலாம். இருப்பினும், அவர்கள் நுகர்வோர் வலைதளம், மொபைல் செயலி, வாட்ஸ்அப் சாட்பாட் அல்லது IVRS உள்ளிட்ட டிஜிட்டல் வழிகள் மூலம் தங்கள் விருப்பத்தைப் பதிவு செய்ய வேண்டும். அத்தகைய நுகர்வோர்,உள்ளூரில் கிடைக்கும் 5 கிலோ அல்லது 10 கிலோ சிலிண்டர்களில் மானியம் இல்லாமல் சந்தை விலையில் LPG-யைப் பெற முடியும்.

முதலில், ஜூன் 30, 2026-க்குள் BAA-வை பூர்த்தி செய்யுமாறு நுகர்வோர் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.பின்னர், இந்த காலக்கெடு பல முறை நீட்டிக்கப்பட்டது, செப்டம்பர் 14 சமீபத்திய காலக்கெடுவாக இருந்தது.

வீட்டு உபயோகத்திற்கான எல்பிஜி, அதன் அடக்கவிலையை விடக் குறைந்தவிலையில் விற்கப்படுகிறது. ஜூன் 2026-ல் ஒரு சிலிண்டருக்கு ரூ.721-ஆக இருந்த மானியம் செப்டம்பர் 2026-ல் சுமார் ரூ. 210-ஆக இருந்தது.

வீட்டு உபயோகஎல்பிஜி-யின் விலையை நுகர்வோருக்கு ஏற்ற வகையில் பராமரிக்க அரசு, எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களுக்கு 2022-23-ல் ரூ.22,000 கோடி இழப்பீட்டை வழங்கியது. 2025-26 மற்றும் 2026-27 ஆகிய ஆண்டுகளில் ரூ. 30,000 கோடியை வழங்கி வருகிறது.

இதுவரை 'BAA' நடைமுறையை முடிக்காத நுகர்வோர், அக்டோபர் 1-ம் தேதிக்கு முன்னதாகவே அதனை நிறைவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

எல்பிஜி சேவைகள் தொடர்பான உதவிகளுக்கு, 1800 2333 555 என்ற கட்டணமில்லா உதவி எண்ணை நுகர்வோர் தொடர்பு கொள்ளலாம்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு அந்தமான் கடல் பகுதியில் உருவானது புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி



வடக்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:-

வடக்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, மத்திய வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்பு உள்ளது.

காற்றழுத்த தாழ்வு மண்டலம்

அடுத்த 48 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும்,வருகிற 22-ந்தேதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் வலுப்பெற்று, வடக்கு ஆந்திரா - தெற்கு ஒடிசா கடற்கரையை நோக்கி நகரக்கூடும்.

பலத்த மழை

இதன் காரணமாக தமிழகத்தில் நீலகிரி, கோவை, கடலூர், கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர்,தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி, மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் இன்றும் நாளையும் இடி, மின்னல்,காற்றுடன் கூடிய பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது.

சென்னை, காஞ்சீபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், சிவகங்கை, ஈரோடு, ராமநாதபுரம், நாமக்கல், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், கரூர், புதுக்கோட்டை, மற்றும்நாகைமாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது.தென் தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்தில் சூறாவளி காற்று வீசக்கூடும். சூறாவளி காற்று வீசக்கூடிய பகுதிகளுக்கு மீனவர்கள் மீன் பிடிக்க செல்ல வேண்டாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கோவையில் தனிஷ்க் ஜுவல்லரி சார்பாக காதணி கண்காட்சி!



கோவையில் தனிஷ்க் ஜூவல்லரி சார்பில் பிரத்யேக காதணிகள் நகைத் தொகுப்பு கண்காட்சியின் துவக்கவிழா ஒவ்வொரு கிளையிலும் சுமார் 1500க்கும் மேற்பட்ட டிசைன்களில் கம்மல்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

டாடா குழுமத்தைச் சேர்ந்த இந்தியாவின் முன்னணி நகை சில்லறை விற்பனை நிறுவனமான தனிஷ்க், கோவையில் பிரத்யேக காதணிகள் நகைத் தொகுப்பு கண்காட்சியைத் தொடங்கியுள்ளது.

கோவை மேட்டுப்பாளையம் சாலை, ஒப்பணக்கார வீதி, ஆர்.எஸ்.புரம் மற்றும் கிராஸ் கட் ரோடு, பொள்ளாச்சி மற்றும் திருப்பூர் ஆகிய பகுதிகளில் உள்ள தனிஷ்க் ஸ்டோர்களில் இந்த பிரத்யேக காதணிகள் கண்காட்சி மற்றும் கோல்டு எக்சேஞ்ச் மேளா நடைபெற்று வருகிறது. தனிஷ்க் நிறுவனத்தின் கிளஸ்டர் ஹெட் தமிழ்நாடு மெர்சின்டைசிங் சந்தோஷ் இக்கண்காட்சியை தொடங்கி வைத்தார்.

காதணிகள் நகைத் தொகுப்பு கண்காட்சியானது, செப்டம்பர் 18ம் தேதி முதல் அக்டோபர் 11ம் தேதி வரை நடைபெற உள்ளது. இக்கண்காட்சி, தினமும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை பார்வையாளர்களுக்காக திறந்திருக்கும். சிறந்த கைவினைத்திறனுடன் உருவாக்கப்பட்ட காதணிகளின் பிரத்யேக வடிவமைப்புகளை ஒரே இடத்தில் பார்வையிடும் வாய்ப்பை வாடிக்கையாளர்களுக்கு இக்கண்காட்சி வழங்குகிறது.

கண்காட்சியின் ஒரு பகுதியாக வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு சிறப்பு சலுகைகளையும் தனிஷ்க் வழங்குகிறது.

ஒவ்வொருநகைவாங்கும் போதும் 20 சதவிகிதம், வரை தள்ளுபடியும் பெறலாம். மேலும், கோல்டு எக்சேஞ்ச் திட்டத்தின் கீழ் 18 காரட் வரையிலான தங்கத்திற்கு 0பர்சன்டேஜ் டேடைக்ஷன் வழங்கப்படுகிறது.

தங்கத்தின் விலை ஏற்ற இறக்கங்களை கருத்தில் கொண்டு, வாடிக்கையாளர்கள் தங்களுக்கான தங்க விலையை முன் கூட்டியே நிர்ணயித்துக் கொள்ளும் வகையில் பெஸ்ட் கோல்டு ரேட் சலுகையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் 25 சதவிகிதம் முன்பணம் செலுத்தி, தங்கத்தின் விலையை ப்ரீஸ் செய்து கொள்ளும் வசதியை வாடிக்கையாளர்கள் பெறலாம். வடிவமைப்பு நேர்த்தி மற்றும் சிறந்த கைவினைத்திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இந்தக் கண்காட்சியில் பல்வேறு வகையான காதணி வடிவமைப்புகள் இடம்பெற்றுள்ளன. இந்நிகழ்ச்சியில் பேசிய தனிஷ்க் நிறுவனத்தின் கிளஸ்டர் ஹெட் தமிழ்நாடு மெர்சின்டைசிங் சந்தோஷ் மற்றும் கோவை ஏரியா பிஸ்னஸ்மேலாளர்சிவரஞ்சனி ஆகியோர் கலந்து கொண்டு காதணிகள் குறித்து எடுத்துரைத்தனர்.



# திருவூர் அன்னை வேளாங்கண்ணி மாதா மூன்றாம் ஆண்டு திருத்தேர் பவனிவிழா

திருவூர் அன்னை வேளாங்கண்ணி மாதா மூன்றாம் ஆண்டு திருத்தேர் பவனிவிழா மிக விமரிசையாக நடைபெற்றது விழாவில் சிறப்பு விருந்தினர்களாக பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் பிரகாசம் (எ) குட்டி மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் கலந்துக் கொண்டனர் , அன்னை வேளாங்கண்ணி அலங்கார ஆடம்பர கொடியை ஏற்றியும் தேர் திரு உலா பவனியை பாதர் ரெவரன்ட் வழக்கறிஞர் முனைவர் திருவள்ளூர் மாவட்டதிசாகுழு உறுப்பினர் சி.வி.எம்.ரமேஷ் அவர்கள் தொடங்கி வைத்து வேளாங்கண்ணியில் எடுத்து வரப்பட்ட தீர்த்தத்தை பக்கதர்களுக்குதெளித்து ஆசிர்வதித்தார் பின்பு மாதா வேளாங்கண்ணி வீதிவீதியாக ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு சீர் செய்து வழிப்பட்டனர் இரவு 10 மணிக்கு ஆரம்பித்த திரு ஊர்வலம் மறு நாள் காலை 7 .00 மணிக்கு முடிவடைந்தது இந்த ஊர்வலத்தில் 1000 மேற்பட்ட பகதர்கள் கலந்துக் கொண்டனர் முன்னதாக விழாவில் திருவூர் சூப்பர் கிங்ஸ் சிலம்பம் குழுவில் கலை நிகழ்ச்சிகள் மேலும் கரடி பானா கரடி வேடம் போட்டு நடனமாடிய கலஞர்கள் அனைவரையும் கவர்தனர் நிகழ்சிக்கு த.வெ.க ஒன்றிய செயலாளர் விஜயகுமார், சிலம்பம் துரைராஜ் (எ) சுந்தர் மற்றும் அன்னை மாதா வேளாங்கண்ணி ஆலய பூசாரி ஹேமநாத் அவர்கள் வழிபாடு செய்த பக்தர்களுக்கு தீர்த்தம் மற்றும் வழிப்பாட்டு மாலைகளை அன்னைக்கு வழங்கினார்

# தளிர்விடும் பாரதம் அறக்கட்டளை சார்பில் பனை விதைகள் சேகரிப்பு; மாணவர்கள் உற்சாக பங்கேற்பு



நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் சார்பில் பனை விதை சேகரிக்கும் நிகழ்வு *ஓலப்பாளையம் மற்றும் தட்டாங்குட்டை* பகுதிகளில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழகஅரசின்*மாநில மரமான பனை மரத்தை* பாதுகாக்கும் நோக்கத்துடன் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்விற்கு தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் தலைவர் *சீனிவாசன்* தலைமை தாங்கினார். செயலாளர் *பிரபு*, பொருளாளர் *சின்னையன்*, துணைத் தலைவர் *வரதராஜன்* தன்னார்வலர் *ரவிச்சந்திரன்* ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் குமாரபாளையம் பகுதியை சேர்ந்த *பள்ளி,கல்லூரிமாணவ, மாணவிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள்* கலந்து கொண்டு 800-க்கும் மேற்பட்ட பனை விதைகளை சேகரித்தனர். அப்போது பேசிய *தலைவர் சீனிவாசன்*, "பனை மரம் *தமிழர்களின் பாரம்பரிய அடையாளம். பனை மரங்கள் புயல், மழை போன்ற இயற்கை பேரிடர்களில்* இருந்து மண்ணை பாதுகாக்கும்" என்றார்.

தொடர்ந்து பேசிய *செயலாளர் பிரபு*, "இன்று நாம் சேகரித்த 800 க்கும் மேற்பட்ட விதைகள் வெறும் விதைகள் அல்ல, *நமது அடுத்த தலைமுறைக்கான நம்பிக்கை விதைகள்*. நமது முன்னோர்கள் *பனை மரத்தை கற்பக விருட்சம்* என்றனர். ஒரு பனை மரம் 100 ஆண்டுகளுக்கு மேல் வாழும், அதற்கு தண்ணீர் ஊற்ற வேண்டியதில்லை, உரம் போட வேண்டியதில்லை. ஆனால் அது நமக்கு பல பலன்களை அள்ளித் தரும். இன்று மாணவர்கள் காட்டும் இந்த ஆர்வம், *நமது பாரம்பரியம் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையை* தருகிறது. ஒவ்வொருவரும் ஒரு பனை விதையாவது நட வேண்டும் என்றார்.

சேகரிக்கப்பட்ட பனை விதைகள் *அக்டோபர் மாதம் 10 மற்றும் 11ம் தேதிகளில் சித்தோடு டெக்ஸ்வேலியில்* நடைபெறும் *பனை மக்கள் திருவிழாவில்* பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் எனவும் மேலும் *காவிரி கரை, குளக்கரைகள், ஏரிக்கரைகள் மற்றும் பள்ளி, கல்லூரி வளாகங்களில் நடப்பட உள்ளதாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# சமூக ரெங்கபுரத்தில் மகாராஜா வாரச்சந்தை திறப்பு விழா முன்னாள் சபாநாயகர் மு.அப்பாவு திறந்து வைத்தார்

நெல்லை மாவட்டம் சமூகரெங்கபுரத்தில்மகாராஜா புதிய வாரச் சந்தை திறப்பு விழா முன்னாள் சபாநாயகர் மு.அப்பாவு கலந்து கொண்டு திறந்து வைத்தார். திறப்பு விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் மகாராஜா வாரச் சந்தை உரிமையாளர்கள் சண்முக சுந்தரம்.நெல்லை கிழக்கு மாவட்ட திமுக விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் முத்துகுமார் குடும்பத்தினர்வரவேற்றனர்

இந்த வாரச் சந்தை வாரத் தோறும் ஞாயிற்றுக்கிழமை காய்கறி சந்தை காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரையிலும் இயங்கும் அதைத் தொடர்ந்து வியாழக்கிழமை ஆடு.கோழி சந்தை இயங்கும் இந்நிகழ்ச்சியில் திமுக ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி.வடக்கன்குளம் எஸ்.ஏ.வி பள்ளி தாளாளர் ம.திவாகரன். திமுக வள்ளியூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் வள்ளியூர் ஒன்றிய பெருந் தலைவர் ராஜா ஞான திரவியம்.திமுக மாவட்ட பிரதிநிதி.சமூகை முரளி. ஒன்றிய குழு உறுப்பினர் இசக்கிபாபு.திமுகமாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் தக்காளி குமார். சமூகரெங்கபுரம் ஊராட்சி மன்ற தலைவர் அந்தோணி அருள். சீலாத்திக்குளம் ஊராட்சி மன்ற தலைவர் சந்தனமாரிவேணுகோபால்.கட்டநேரி கருணைராஜ். சமூகரெங்கபுரம் ஊராட்சி துணை தலைவர் பேச்சியப்பன். வேணுகோபால்.கட்டநேரி கருணைராஜ்.

சமூகரெங்கபுரம்





ஊராட்சி துணை தலைவர் பேச்சியப்பன். மற்றும் நிர்வாகிகள் கழக பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# உத்துமலையில் நான்கு கிணற்றுக்கு ஒரு 25 H/V டிரான்ஸ்பாமார் புதிய திட்டத்தை கைவிட கோரி மின் வாரிய அலுவகத்தில் விவசாயிகள் முற்றுகையிட்டு மனு



தென்காசி மாவட்டம் வீகே புதூர் அருகே ஊத்துமலை அதனை சுற்றியுள்ள கிராமங்கள் விவசாயிகளின்

நான்கு கிணற்றுக்கு ஒரு 25 H/V டிரான்ஸ்பா மார் புதிய திட்டத்தை கைவிடக் கோரி தென்காசி மாவட்ட தமிழ்நாடு அனைத்து விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு மாவட்ட செயலாளர் மகாலிங்கம் தலைமையில் விவசாயி கள் மின்வாரிய அலுவலகத்தில் திருநெல்வேலி கிராமபுறம் மின்செயற் பொறியாளர் குத்தா லிங்கம், உதவி செயற்பொறியாளர் சுப்பிரமணி யன், ஆகியோரிடம் முற்றுகையிட்டு கோரிக்கை மனு அளித்தனர்

அவர்களது கோரிக்கை மனுவில் தென்காசி மாவட்டம் வீகே புதூர் அருகே ஊத்துமலை அதனை சுற்றியுள்ள கிராமங்கள் விவசாய த்தை மட்டுமே பிரதான தொழிலாக கொண்ட கிராமம் ஆகும்

தற்போது ஊத்துமலை மின் வாரியம் விவசாயத்திற்கு பயன்படுத்திய இலவச மின்சாரத்தை தற்போது உள்ள முறையை மாற்றி நான்குகிணற்றுக்கு ஒரு 25 H/V டிரான்ஸ்பாமார் என்ற முறையில் விவசாயத்திற்கு புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சித்து உள்ளார்கள். இது சம்பந்தமாக விவசாயிகளிடம் எந்த முன் அறிவிப்பு இல்லாமல் புதிய திட்டத்தை செயல்படுத்த உள்ளார்கள் இது விவசாயிகளிடம் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்த பணியை உடனடியாக நிறுத்த வேண்டுமெனவும் மேலும் ஊத்துமலை கிராமத்தில் அறிவிக்கபடாத மின் வெட்டை அமல்படுத்துவது இரவு நேரத்திலும் தொடர் மின் வெட்டு உள்ளது அதனை உடனடியாக மின்வாரியம் நடவடிக்கை எடுத்து தொடர்ந்துதடையில்லா மின்சாரம்வழங்கவேண்டுமென அலுவலகத்தை முற்றுகையி ட்டனர் தவலறிந்த வந்த ஊத்துமலை காவல் ஆய்வாளர் கணேஷ் பாண்டியன் காவல் உதவி ஆய்வாளர் வேல்முருகன் ஆகியோர் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமுக தீர்வு காணப்பட்டதும் விவசாயிகள் கலைந்து சென்றனர். விவசாயசங்கநிர்வாகிகள் கிளை தலைவர் வெள்ளத்துரை பாண்டியன், துணைத் தலைவர் ராஜா& கருப்பசாமி, சங்கரலிங்க தேவர், கணபதி, ஆலங்குளம் ஒன்றிய தலைவர் முத்துபாண்டி, ஆலங்குளம் ஒன்றிய செயலாளர் குட்டித்துரை, தொழில் அதிபர்கள் தங்கத்துரை, ஜசக், சீனிவாசன், மற்றும் பலர் உடனிருந்தனர்

# பாவூர்சத்திரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் வக்கீல் பொ. சிவபத்மநாதன் முன்னிலையில் காங்கிரஸ் கட்சியினர் திமுகவில் இணைந்தனர்



தென்காசி மாவட்டம், கீழப்பாவூர் கிழக்கு ஒன்றியம் முத்துகிருஷ்ண பேரியை சேர்ந்த காங்கிரஸ் கட்சியினர் திமுகவில் இணையும் நிகழ்ச்சி பாவூர்சத்திரத்தில் நடந்தது.

காங்கிரஸ் நிர்வாகிகளான ரா. சொல்லின் செல்வன், த. ஜெயக்குமார், தி.சிவஞானம், தி.ஜெயராஜ், பெ. ராமர் ஆகியோர் அக்கட்சியில் இருந்து விலகி முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் வக்கீல் பொ.சிவ பத்ம நாதன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் கீழப்பாவூர் பேரூர் செயலாளர் ஜெகதீசன், கல்லூரணி ஊராட்சி தலைவர் ராஜ்குமார், முன்னாள் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் சத்திய ராஜ், ஒன்றிய பிரதிநிதி மூர்த்தி, கிளை அவைத்தலைவர் மகேந்திரன், மேல கிருஷ்ண பேரி கிளைசெயலாளர்செல்லையா ஜெயராஜ், கிளை செயலாளர் ஏசுதாசன், வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# கோவையில் ஜெனோரா வீட்டு உரிமையாளர்களுக்கு சாவி வழங்கும் நிகழ்வு

## தன்னம்பிக்கை பேச்சாளர், பிரபல தொகுப்பாளர், நீயா நானா கோபிநாத், ஈரோடு மகேஷ் பங்கேற்று சிறப்புரையாற்றினார்




கோவை கோல்ட்வின்ஸ் பகுதியில் ஜென்விஸ்டாஸ் ரியால்டி சார்பில் உருவாக்கப்பட்டுள்ள ஜெனோரா சொகுசு வில்லா குடியிருப்பின் வீட்டு உரிமையாளர்களுக்கு சாவி வழங்கும் நிகழ்வு, கோவை அவினாசி சாலையில் உள்ள மெர்லிஸ் நட்சத்திர ஓட்டல் அரங்கில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஜெனோராவில் மொத்தம் 60 அதி நவீன சொகுசு வில்லாக்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், முதற்கட்டமாக வீடுகளைத் தேர்வு செய்த 30 குடும்பங்களுக்கு சாவிகள் வழங்கப்பட்டது

இதன் மூலம் தங்களது புதிய வீட்டை மட்டுமின்றி, எதிர்காலத்தில் அண்டை வீட்டாராக இருக்கப்போகும் குடும்பங்களையும் முன்கூட்டியே அறிமுகம் செய்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

முன்னதாக நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் ஜென்விஸ்டாஸ் ரியால்டி தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் ஓம் பிரகாஷ் குணசேகரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது, "வீட்டை ஒருமுறைதான் தேர்வு செய்கிறோம்; ஆனால் அண்டை வீட்டாருடன் ஒவ்வொரு நாளும் வாழ்கிறோம். எனவே, முதல் கிரகப்பிரவேசத்திற்கு முன்பாகவே எங்கள் குடும்பங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே எங்களது நோக்கம்" அவர்களுடன் ஒரு நட்புறவை ஏற்படுத்தவே இந்த விழா என்று தெரிவித்தார். தரமான கட்டிடங்களை கட்டி கொடுப்பதே எங்கள் நிறுவனத்தின் முக்கிய நோக்கமாக இருப்பதாக தெரிவித்த அவர், ஜெனோரா குடியிருப்பில் இதை முழுமையாக காண முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்..

ஒவ்வொரு வில்லாவிலும் தனி மின்தூக்கி உள்ளிட்ட நவீன வசதிகளுடன், சிறப்பு கட்டிடக்கலை மற்றும் உள் அலங்கார வசதிகளும் இடம்பெற்றுள்ளதாக கூறிய அவர், தரம் மட்டுமே ஜெனோராவின் தாரக மந்திரம் என தெரிவித்தார்..

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு பேச்சாளராக கோபிநாத், மற்றும் ஈரோடு மகேஷ் ஆகியோர் கலந்து கொண்டு, வீடு என்பது வெறும் கட்டிடம் மட்டுமல்ல; குடும்பத்தினர் மகிழ்ச்சியாக வாழ்வதுடன், நல்ல அண்டை உறவுகளை உருவாக்கும் இடமாகவும் இருக்க வேண்டும் என்பது குறித்து பேசினர்.

ஜென்விஸ்டாஸ் ரியால்டி நிறுவனத்தை தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்களைச் சேர்ந்த 17 முன்னணி ஐவுளி நிறுவனங்கள் இணைந்து உருவாக்கியுள்ளன. மூன்று தசாப்தங்களுக்கும் மேலான தொழில் அனுபவம் கொண்ட இந்நிறுவனம், நிதி வலிமை மற்றும் தொழில் அனுபவத்தை ஒருங்கிணைத்து ஜெனோரா திட்டத்தை செயல்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

முதல் கட்டமாக 30 குடும்பங்களுக்கு சாவி வழங்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 30 சொகுசு வில்லாக்கள் விற்பனைக்கு உள்ளதாக நிறுவனத்தினர் தெரிவித்தனர்.



# கோவையில் பெண் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்க கண்காட்சி

கோவையில் பண்டிகை மற்றும் சமூக உணர்வைக் கொண்டாடும் வகையில், "தீபாவளி உட்சவ் 2026 எனும் கண்காட்சி கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் இன்று துவங்கியது.

1952ம் ஆண்டு, நிறுவப்பட்ட, பெண்களுக்கான ஒரு சமூக மன்றமாக, ஆர். எஸ். புரம் லேடிஸ் கிளப், இருந்து வருகின்றது. இந்த அமைப்பின் சார்பாக தீபாவளி உட்சவ் 2026 எனும் கண்காட்சி, கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் செப்டம்பர் 19 மற்றும் 20 ஆகிய தேதிகளில், காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெற்று வருகின்றது. அமைப்பின் தலைவர் ஜெயஸ்ரீ பிரசாத் தலைமையில் நடைபெறும் இந்த இரண்டு நாள் நிகழ்வை, பூஜா சுதாகர் ராவ் மற்றும் சந்தீப் கவுர் ஆனந்த் ஆகியோர் துவக்கி வைத்தனர். கடைசி நேர தீபாவளி கூட்டத்திற்காகக் காத்திருக்கவேண்டாம் – எங்களுடன் தீபாவளிக்குத் தயாராகுங்கள்!" என்ற உணர்வுடன், இந்த உட்சவ் கண்காட்சியில், புடவைகள், ஃபேஷன் நகைகள், காலணிகள், உணவுப் பரிசுகள், வாழ்க்கை முறைப் பொருட்கள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய, பண்டிகைக் காலப் பொருட்களை காட்சிப்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்வின் முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்றாக, பெண் தொழில் முனைவோருக்கு அளிக்கப்படும் முக்கியத்துவமாக அமைந்துள்ளது. இங்குள்ள அரங்குகளில் கிட்டத்தட்ட 90 சதவிகிதம் பெண் தொழில்முனைவோரால் அமைக்கப்பட்டுள்ளது. இந்தொழில்முனைவோருக்கு அவர்களின் திறமை, படைப்பாற்றல் மற்றும் தொழில்களை வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்குவதோடு, அவர்களை பரந்த சமூகத்துடன் இணைப்பதையும் இந்த உட்சவம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த கண்காட்சி, ஷாப்பிங் மற்றும் பொழுதுபோக்கையும் தாண்டிய ஒரு கொண்டாட்டமாக மாறும் எனவும், தீபாவளி உட்சவம் 2026, வெறும் ஒரு கண்காட்சியை விட மேலானதாக இருக்கும் என்றும் விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இந்த இரண்டு நாள் கொண்டாட்டத்தில், இன்று கரோக்கி இசை மாலையும், ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் உற்சாகமான தம்போலா மாலையும் இடம்பெற உள்ளது. மேலும் இங்கு மெழுகுவர்த்தி தயாரிக்கும் பட்டறை, ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் மற்றும் பிற சுவாரஸ்யமான அனுபவங்கள் கொண்டாட்டங்களை மேலும் சிறப்பிக்க உள்ளது



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் பவ்டாகுழுமம் சார்பில் மறைந்த காங்கிரஸ் தலைவரும் இலக்கியச் செல்வருமான குமரி அனந்தன் அவர்களின் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக குமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் கலந்து கொண்டு நூலை வெளியிட தமிழ்நாடு நாடார் மகாஜன சங்க தலைவர் கறிக்கோல்ராஜ் மற்றும் நெல்லை பாராளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்

# அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியத்தில் த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேல் சூறாவளி சுற்றுப்பயணம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் த வெ க சார்பில் போட்டியிடும் மரகதம் குமரவேல் பெரும்பேர் கண்டிகை கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீஎல்லையம்மன் ஆலயத்தில் வழிபாடு செய்து பெரும்பேர் கண்டிகை.

கடமலைபுத்தூர் . தொழுப்பேடு ஆத்தூர் எடையாளம் உள்ளிட்ட கிராங்களில் சூறாவளி பிரச்சாரம் மேற்கொண்ட வேட்பாளர் மரகதம் குமரவேல் அவர்களுக்கு பொதுமக்கள் பட்டாசு வெடித்து ஆரத்தி எடுத்து வரவேற்பு அளித்தனர் இந்த பிரச்சாரத்தில் மதசார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி நிர்வாகிகள் தொண்டர்கள் மகளிரணியினர் மற்றும் விசிக மாவட்ட செயலாளர் அன்புச்செல்வன், பொருளாளர் பேரறிவாளன். ஒன்றிய செயலாளர் பன்னீர்செல்வம். . மாநில நிதி செயலாளர் டோல்கேட் எடிசன். தவெக. ஒன்றிய செயலாளர் இளங்கோவன் மாவட்ட துணை செயலாளர் பாலாஜி. விசிக நிர்வாகிகள் சுபாஷ். கமல். கெங்காவளவன்.

உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# மதுராந்தகம் இடைத்தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர் பரந்தாமன் பிரச்சாரம்

## முன்னாள் அமைச்சர் மா சுப்பிரமணியம், மாவட்ட செயலாளர் க.சுந்தர் துவக்கி வைத்தனர்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி தொகுதிக்கு தற்போது இடைத்தேர்தல் நடைபெற்று வருகிறது

இதில் அனைத்து கட்சிகளும் பிரச்சாரத்தை துவக்கி வாக்கு சேகரித்து வரும் நிலையில் இன்று திமுக வேட்பாளர் பரந்தாமன் பிலாப்பூர் சித்தண்டி மையூர் மாமண்டூர் ஆகிய பகுதிகளில் வாக்கு சேகரித்தார் அப்பொழுது பொதுமக்களிடையே எதற்கான இடைத்தேர்தல் என்று பேசிய பரந்தாமன் தற்போது நடைபெற்று வரும் நலத்திட்டங்கள் அனைத்தும் திமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்டது அதைத்தான் தற்போதைய தமிழக வெற்றி கழகம் தொடர்ந்து நடத்தி வருகிறது

அவர்கள் புதுமையான எந்த திட்டமும் அறிவித்தும் எதுவும் செயல்படுத்தப்படவில்லை படித்த இளைஞர்களுக்கு 4,000 ரூபாய் பணம் வழங்கப்படவில்லை சிலிண்டர் வழங்கப்படவில்லை

2500 ரூபாய் வழங்கப்படவில்லை ஆனால் கடந்த ஆட்சியில் திமுக அறிவித்த திட்டங்களை தான் இந்த ஆட்சி நடைமுறையில் வைத்துள்ளது எந்த விதமான திட்டங்களையும் அறிவிக்காத அரசு தமிழகத்தில் தற்போது நடந்து கொண்டிருப்பதாக பொது மக்களிடையே பேசி வாக்கு சேகரித்தார். இதில் திமுக கழக மாநில மாவட்ட ஒன்றிய பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பட்டிமன்ற பேராசிரியர் சாலமன் பாப்பையாவின் மறைவையொட்டி, மக்கள் சிந்தனை பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன் சார்பில் நினைவேந்தல் நிகழ்ச்சி ஈரோடு பெரியார் மன்றத்தில் ஏற்பாடு செய்து நடைபெற்றது





ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி தலைமையில் பேராசிரியரின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார். நிகழ்ச்சியில் அனைத்து கட்சி தலைவர்களும் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினார்கள் இதில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா புகழஞ்சலி உரையாற்றினார். அவர் பேசுகையில்,"நடிப்பு என்றால் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களைப் போல, பட்டிமன்றம் என்றால் சாலமன் பாப்பையா. 'அன்பு தாய்மார்களே, அருமை சகோதரிகளே' என்ற அவரது அன்புக் குரல் தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிலும் ஒலித்தது.

மதுரை சாத்தங்குடியில் 1936-ல் பிறந்து, மதுரை அமெரிக்கன் கல்லூரி பேராசிரியராகி, 12,000-க்கும் மேற்பட்ட பட்டிமன்றங்களை நடத்தியவர். சன் டிவியில் திருக்குறளுக்கு விளக்கம் தந்து, முதல்வன், பாய்ஸ், சிவாஜி படங்களில் நடித்து, கலைமாமணி, பத்மஸ்ரீ விருதுகளை பெற்றவர். அவர் மறைந்தாலும் அவர் உருவாக்கிய பட்டிமன்ற பேச்சாளர்கள் மூலம் அவர் வாழ்வார்" என்று நெகிழ்ச்சியுடன் பேசினார். தொடர்ந்து, த. ஸ்டாலின் குணசேகரன் 2025 இல் எழுதிய "(மக்கள் சிந்தனை) பேரவையும் பேராசிரியரும்" என்ற நூல் 50% தள்ளுபடியில் ரூ.30-க்கு வழங்கப்பட்டது. அதனை பெற்றுக்கொண்ட காங்கிரஸார் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம், முன்னாள் எம்.எல்.ஏ ஆர்.எம்.பழனிசாமி, மண்டல தலைவர்கள் மாமரத்துப்பாளையம் எஸ்.கோபி, ஆர். விஜயபாஸ்கர், முன்னாள் மாமன்ற உறுப்பினர் கை.சுப்பிரமணியம், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் சி.மாரிமுத்து, ஊடகப்பிரிவு தலைவர் ம.முகமது அர்சத், சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே. என்.பாஷா, வழக்கறிஞர் பிரிவு மாநில செயலாளர் சி.எம்.ராஜேந்திரன், கலைப்பிரிவு மாவட்ட தலைவர் ஜாபர் அலி, சேவாதளம் துணைத்தலைவர் ராஜாஜிபுரம் பி.குமரேசன், ஈரோடு பெரிய மாரியம்மன் கோயில் வகையறா அறங்காவலர் அம்மன் மாதேஷ், பெரியார் நகர் செந்தில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இராணிப்பேட்டையில் பா.ஜ.க.வின் பண்டிட் தீனதயாள் உபாத்யாய மாவட்ட பயிற்சி முகாம் தொடக்கம்



இராணிப்பேட்டை: பாரதிய ஜனதா கட்சியின் பண்டிட் தீனதயாள் உபாத்யாய பயிற்சி பேரியக்கத்தின் சார்பாக, இராணிப்பேட்டை மாவட்டத்தில் இரண்டு நாட்கள் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது சனிக்கிழமை நேற்று தொடங்கி நாளை ஞாயிற்றுக்கிழமை முடிவடைய உள்ளது

இராணிப்பேட்டை மாவட்ட பா.ஜ.க. சார்பில் நடைபெறும் இந்த பயிற்சி முகாமிற்கு மாவட்டத் தலைவர் பி. ஆனந்தன் தலைமை தாங்கினார். முகாம் பார்வையாளரும், மாநில செயற்குழு உறுப்பினருமான வாசுதேவன் முன்னிலை வகித்தார். இந்த பயிற்சி முகாமில், கட்சியின் கொள்கைகள், அமைப்பின் செயல்பாடுகள் மற்றும் வருங்காலப் பணிகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாநில, மாவட்ட நிர்வாகிகள், சார்பு அணிகள் மற்றும் பிரிவுகளின் தலைவர்கள், மண்டலத் தலைவர்கள் உள்ளிட்ட சுமார் 100-க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு பயிற்சி முகாமை சிறப்பித்து வருகின்றனர்.



ஈரோடு மாவட்டம், வ.உ.சி. பூங்கா, மல்லிகை அரங்கத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கு.ஜெகதீஸ்வரி ஆகியோர் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நேற்று (20.09.2026) உணவு பரிமாறினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மாவட்ட திட்ட அலுவலர் ச.பவித்ரா, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் (ஈரோடு நகர்புறம்) ஆ.மோகனவித்யா உட்பட பலர் உள்ளனர்.



19.09.2026 நேற்று ஈரோடு பவனி பவிஸ் பார்க்கில் மீண்டும் தென்னகத்து காசியாம் கூடுதுறை கும்பமேளா ஆலோசக கூட்டம் நடைபெற்றது சுமுக சேவை ஆலோசகர்கள் யோக சித்தர் ஐயாவும் திரு விஜயகுமார் அவர்களும் கும்பமேளா பொறுப்புகலை சில முக்கிய பொறுப்புகலை தனிபட்ட குழுவிட்கு வெவேறக பிரிந்து தரப்பட்டது ,



ஈரோடு மாவட்டம், வ.உ.சி. பூங்கா, மல்லிகை அரங்கத்தில், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி அவர்கள் மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கு.ஜெகதீஸ்வரி ஆகியோர் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழாவினை துவக்கி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை நேற்று (20.09.2026) வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மாவட்ட திட்ட அலுவலர் ச.பவித்ரா, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் (ஈரோடு நகர்புறம்) ஆ.மோகனவித்யா உட்பட பலர் உள்ளனர்.

# உக்கடம் வின்சென்ட் குடியிருப்பு பகுதியில் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி



கோவை HDFC Parivartan on Wheels – Ramky Foundation சார்பில், Choose Life, Not Drugs என்ற கருப்பொருளில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி உக்கடம் வின்சென்ட் குடியிருப்பு பகுதியில் நடைபெற்றது. நிகழ்ச்சியை உக்கடம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மதுசூதனன் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு வழக்கறிஞர் ஹஸ்கர் அலி அவர்கள் தலைமை தாங்கினார்.

அருண்ராஜ், மருத்துவ அலுவலர் போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் உடல் நலம், உளவியல், உளசமூக மற்றும் சட்டரீதியான பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு உரையாற்றினார். மேலும், போதைப்பொருள் பயன்பாட்டைத்தடுப்பது, ஆரோக்கியமான வாழ்க்கை முறையைத் தேர்வு செய்வது மற்றும் சமூகத்தின் பொறுப்பு குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக Choose Life, Not Drugs என்ற கருத்தை மையமாகக் கொண்ட சிறப்பு நடன நிகழ்ச்சி, போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி மற்றும் கையெழுத்து இயக்கம் ஆகியவை நடைபெற்றன.

நிகழ்ச்சியில் கிரிஸ்டினா, சையத் இப்ராஹிம், சிவிமோல் மற்றும் அனீஷ் ஆகியோர் கலந்து கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் பங்களித்தனர்.

போதைப்பொருள் இல்லாத, ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவதில் சமூகத்தின் ஒவ்வொருவரின் பங்களிப்பும் அவசியம் என்ற வலியுறுத்தலுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.



# மதுராந்தகம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது ரூ.10 கோடிக்கு மேல் நலத்திட்ட பணிகள் செய்துள்ளேன்

## அதிமுக வேட்பாளர் கணிதாசம்பத் பேச்சு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் (தனி ) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அதிமுக வேட்பாளர் கணிதாசம்பத், மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்குப்பட்ட விநாயகர்நல்லூர், வேடந்தாங்கல், வளையபுத்தூர், வெள்ளபுத்தூர், சித்தத்தூர், உள்ளிட்ட 30 க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு திறந்த வாகனத்தில் சென்று இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

அப்பொழுது, அதிமுக வேட்பாளர் கணிதாசம்பத், வாக்காளர்களிடையே பேசும்போது: 2011 முதல் 2016 வரை மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் உறுப்பினராக இருந்தபோது மதுராந்தகம் தாலுகா அலுவலகம், மதுராந்தகம் ஒருங்கிணைந்த நீதிமன்றம், மதுராந்தகம் ஒன்றியத்தில் கத்திரிச்சேரி மேம்பாலம், அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில் தண்டர்பேட்டை மேம்பாலம், எல். எண்டத்தூர் சுகாதார நிலைய கட்டிடம்,

ஜமீன் எண்டத்தூர் சுகாதார நிலைய கட்டிடத்தில் 30 படுக்கை வசதி கொண்டது மாற்றி அமைத்துள்ளேன். 10 கோடிக்கு மேல் நலத்திட்ட பணிகளை செய்துள்ளேன். இது மட்டுமில்லாமல் அரசின் அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தி உள்ளோம்.என்று பேசினார்.

இந்த வாக்கு சேகரிப்பின் போது மாநில மகளிர் அணி செயலாளர் வளர்மதி, மாவட்டச் செயலாளர் திருக்கழுக்குன்றம் ஆறுமுகம், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் பக்தவச்சலம், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் தனபால், பாஜக மாவட்ட தலைவர் டாக்டர் பிரவீன்குமார், பாஜக மாவட்ட பொருளாளர் அக்ரோ பாலாஜி, இந்திய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சண்முகம் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடன் சென்றனர்.



ஈரோடு மாவட்டம், வ.உ.சி. பூங்கா, மல்லிகை அரங்கத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கு.ஜெகதீஸ்வரி ஆகியோர் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நேற்று (20.09.2026) சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மாவட்ட திட்ட அலுவலர் ச.பவித்ரா, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் (ஈரோடு நகர்புறம்) ஆ.மோகனவித்யா உட்பட பலர் உள்ளனர்.

## ஈரோடு மாவட்டம் தாளவாடியில்

# மத்தியப் பிரதேசத்தில் உள்ள புனித நர்மதை நதியிலிருந்து கொண்டுவரப்பட்ட 5 அடி உயர பாணலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது

ஈரோடு மாவட்டம், தாளவாடி: தாளவாடி தலைமலை அருகே உள்ள முதியனூரில், ஸ்ரீ ராமர் சீதையுடன் வனவாசம் மேற்கொண்டதாகக் கூறப்படும் கானகப் பகுதிக்கு அருகில் அமைந்துள்ள தொட்டபுரத்தில், 46 அடி உயர ஸ்ரீ ருத்ர ஜெயவீர ஆஞ்சநேயர் திருக்கோவில் அமைந்துள்ளது.

இக்கோவிலில் மத்தியப் பிரதேசத்தில் உள்ள புனித நர்மதை நதியிலிருந்து கொண்டுவரப்பட்ட 5 அடி உயர பாணலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

பிரதிஷ்டைக்காக கொண்டு வரப்பட்ட பாணலிங்கம், 48 நாட்கள் தண்ணீரிலும், தொடர்ந்து 48 நாட்கள் நவதானியங்களிலும் வைத்து சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. பின்னர் கோ பூஜை நடத்தப்பட்டு, யாகங்கள் வளர்க்கப்பட்டன. காசி மற்றும் பல்வேறு புண்ணிய நதிகளின் புனித நீர் தெளிக்கப்பட்டு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

சுமார் நான்கு டன் எடையுள்ள ஆவுடையாருடன் லிங்கம், கிரேன் உதவியுடன் கோவில் அமைய உள்ள இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அப்போது ஏராளமான பக்தர்கள், கோவில் அறங்காவலர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் ஒன்றிணைந்து "ஓம் நமச்சிவாய" என சிவநாமத்தை முழங்கினர்.



பிரதிஷ்டை நிகழ்வில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு சுவாமிக்கு அபிஷேகம் செய்யப்பட்ட புனித நீர் தெளிக்கப்பட்டதுடன், அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கோவிலைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல், கோபுரங்கள் அமைத்தல் உள்ளிட்ட கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. பணிகள் நிறைவடைந்த பின்னர் திருக்கோவில் கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளதாக அறங்காவலர்கள் தெரிவித்தனர்.

கோவில் கட்டுமானப் பணிகளை விரைந்து நிறைவேற்ற தன்னார்வலர்கள் மற்றும் கொடையாளர்கள் தங்களால் இயன்ற உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என்றும் அறங்காவலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# BMW flies off bridge, flips midair; terrifying Mumbai crash captured on CCTV



*Terrifying visuals have emerged of a speeding BMW crashing on the Mumbai Coastal Road on Sunday. Three people, including the driver, were killed, and one person was critically injured in the incident. CCTV footage timestamped around 5 am on September 20, 2026, captures the car flying off the bridge and flipping in the air before crashing into a construction site below.*

*The incident happened during the early hours on Sunday near Lotus Jetty, opposite Lala Lajpatrai College.According to the police, the car was travelling from Marine Drive towards Haji Ali when the driver allegedly lost control due to speeding, as HT reported earlier.The injured individuals were taken to the hospital, where three were declared dead. The victims involved in the crash have been identified as Aditya Oswal, 20, Aditya Jakasniya, 19, Sanay Gujar, 21, and a 17-year-old.ujar was driving the car while the three others were riding along with him. Oswal is the sole survivor of the tragic incident.*



அய்யா வைகுண்டர் சேவா சங்கம் சார்பாக நடைபெற்ற விழாவில் தமிழக வெற்றிக் கழக பிரமுகர் நாகர்கோயில் ஆர்.எஸ்.ராஜன் கலந்து கொண்டு அன்னதான நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.